SC.No. 138/2018
PW – 1
28.01.2025
பெயர் : செல்வம்
த/பெ. : சுந்தரம்

**<u>மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நாங்கள் வசித்து வரும் வீடு இரண்டு வாசல்கள் கொண்ட வீடு. அது இரண்டு பகுதிகளாக உள்ளது. ஒரு பகுதியில் நாங்களும், மற்றொரு பகுதியில் சித்திரைக்கண்ணன் என்பவரும் தனித்தனியாக வசித்து வருகிறோம். மேற்படி வீடு பிரிக்கப்படாத பொது சொத்து என்று சொன்னால் சரிதான். எனது தாயார் வீரம்மாள் எங்களுடன் வசித்து வருகிறார். எங்கள் சொத்தை பிரிப்பதற்கு எங்களிடையே பேச்சு வார்த்தை எதுவும் நடக்கவில்லை. எங்களிடையே பேச்சு வார்த்தை நடந்தது என்று சொன்னாலும் அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. அந்த சொத்து எனது தகப்பனார் பெயரில் இருந்து வருகிறது. சம்பவ காலத்தில் எனது தகப்பனார் உயிருடன் தான் இருந்தார். அந்த சொத்தை சித்திரைக்கண்ணன் அவருடைய சுயசம்பாதியத்தில் வாங்கியதாக அவருக்கும் எங்களுக்கும் பலமுறை பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்த போது எனது தகப்பனார் யாருடன் இருந்து வருகிறார் என்று விசாரிக்கவில்லை. போலிசார் எனது தகப்பனாரை விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. நானும் எனது தாயாரும் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது எனது தகப்பனார் எங்களை பார்த்தார். எனது தகப்பனாரும் எங்களுடன் தான் இருந்தார். மேற்படி வீட்டை எனது பெயரில் எழுதசொல்லி நான் எனது தாயாரையும தந்தையையும் வற்புறுத்தினேன் என்று சொன்னாலும் அது சம்மந்தமாக எனக்கும் எனது சகோதரன் சித்திரைக்கண்ணனுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதில் விரோதம் இருந்தது என்று சொன்னாலும் அதை நான் மறைக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சியாக உள்ள

சிதம்பரம் ஆசிரியராக இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். எங்கள் வீட்டிற்கு அருகே உள்ள அருணாச்சலம் என்பவரும் ஆசிரியராகவே உள்ளார். எதிரிகள் வீட்டிற்கு மேற்கு பக்கம் மேற்படி அருணாச்சலம் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். நாங்கள் மருத்துவமனையில் இருந்த போது மேற்படி சிதம்பரம் மட்டும் எங்களை பார்க்க வந்தார். மேற்படி சிதம்பரம் தான் என்னை மருத்துவமனையில் சேர்த்தார். போலிசார் வரும்வரை சிதம்பரம் அங்கிருந்தார். அங்கு சிதம்பரத்தை போலிசார் விசாரித்தனர். நான் போலிசாரிடம் வாக்குமூலம் அளிக்கும் சமயத்தில் என்னுடைய உறவுக்காரர்கள் என்னுடன் இருந்தார்கள். புகார் வாக்குமூலத்தை எப்படி அளிக்க வேண்டும் என்று சிதம்பரம் எனக்கு கூறவில்லை. புகார் வாக்குமூலம் அளிக்கும் வரை மேற்படி சிதம்பரம் அங்கு இல்லை. புகார் வாக்குமூலத்தை காவல்துறை அதிகாரிதான் எழுதினார். அந்த புகார் வாக்குமூலத்தில் எனது தாயார் அல்லது அவேறு உறவினர்கள் யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. வாக்குமூலம் கொடுத்த சமயத்தில் எனது வலது கையில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவமனை வார்டில் வைத்து தான் புகார் வாக்குமூலம் அளித்தேன். அப்போது மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இருந்தார்கள். புகார் வாக்குமூலம் பெறும்போது இரவு 8.30 மணி இருக்கும். மருத்துவமனையில் என்னை அனுமதிக்கும்போது எனக்கு காயம் எப்படி ஏற்பட்டது என்று மருத்துவர் என்னை விசாரித்தார். மருத்துவமனைக்கு என்னை யார் அழைத்து வந்தார்கள் என்றும் மருத்துவர் என்னிடம் கேட்டார். அதை அவர் குறித்துக்கொண்டார். சித்திரைக்கண்ணன் சம்பவ இடத்திற்கு வராமல் இருந்திருந்தால் வழக்கு சம்பவம் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான். எனது வீட்டின் முன் பகுதி மண்தரை தான். சம்பவ சமயத்தில் நான் அணிந்திருந்த உடைகளில் இரத்தக்கறை எதுவும் படவில்லை. எனது தாயாரின் உடைகளில் அப்போது இரத்தக்கறை படிந்திருந்தது. எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் எதிரியின் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது வீட்டிற்கும் எதிரியின் வீட்டிற்கும் இடையே தடுப்பி எதுவும் இல்லை. அது போன்று தடுப்பி உண்டு என்று சொன்னாலும் அதை வழக்கிற்காக மறைக்கிறேன்

என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிகள் வீட்டிற்கு முன்புறம் அருணாச்சலம் வாத்தியார் வீடு உள்ளது என்று சொன்னாலும் சரிதான். மேற்படியார்கள் வீட்டிற்கு இடையில் எதிரிகளுடைய ஆட்டுக்கொட்டம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த ஆட்டுக்கொட்டம் போட்டது சம்மந்தமாக எதிரிகளுக்கும் மேற்படி அருணாச்சலம் வாத்தியாருக்கும் மனஸ்தாபம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படியார்களுக்கு இடையே அந்த சங்கதி சம்மந்தமாக தகராறு உண்டு என்று சொன்னாலும் அதை நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் சிதம்பரம் வாத்தியாருக்கும் பாதை சம்மந்தமாக வழக்கு நடந்தது பற்றி கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும் மேற்படி சிதம்பரம் மற்றும் அருணாசலம் ஆகியோர்களுக்கு இடையே பிரச்சனை சம்மந்தமாக மேற்படி சிதம்பரம் தூண்டியதன் பேரில் தான் எதிரிகள் மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற காலத்தில் நான் வசித்து வந்த வீட்டில் தற்போது குடியிருக்கவில்லை. அந்த வீடு சம்மந்தமாக சிதம்பரத்துடன் நாங்கள் விற்பனை ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை. அதுபோன்று விற்பனை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு வீடும் சிதம்பரத்திடம் ஒப்படைக்கப்பட்டு இந்த வழக்கு நிலுவையில் இருந்து வருவதை காரணம் காட்டி சிதம்பரத்திற்கு விற்பனை செய்யாமல் இருந்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் ஈடுபடுத்தப்பட்டதாக சொல்லும் ஆயுதங்களின் வடிவங்கள் குறித்து நான் போலிசாரிடமோ, புகாரிலோ தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சிதம்பரம் வீட்டிற்கு தெற்கு பக்கம் காலியிடம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த இடம் அருணாச்சலத்திற்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த இடம் அருணாச்சலம் கட்டுப்பாட்டில் உள்ளது. எனக்கும் சாட்சி சித்திரைக்கண்ணனுக்கும் சொத்து பிரிப்பது குறித்து விரோதம் தஇருந்தது என்றும் அதனால் ஏற்பட்ட தகராறில் தான் எனக்கும் எனது தாயாருக்கும் காயம் ஏற்பட்டது என்றும் சிதம்பரத்திற்கும் எதிரிகளுக்கும் உள்ள விரோதத்தின் அடிப்படையில் எதிரிகளை பழிவாங்க வேண்டுமென்பதற்காக

சிதம்பரத்தின் தூண்டுதலின்பேரில் புகார் பொய்யாக அளிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் எங்களுக்கும் இந்த வழக்கிற்கு முன்பு வேறு வழக்குகள் எதுவும் இல்லை என்று சொன்னால் வழக்குகள் எதுவும் இல்லை பாதை பிரச்சனை மட்டும் இருந்தது. அதுபோல் பாதை பிரச்சனை எங்களுக்குள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்னநேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகள் எனக்கு காயத்தை ஏற்படுத்தவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. எனக்கு எதிரிகள் மூலம் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வேறு வகையில் எனக்கு ஏற்பட்ட காயத்தை எதிரியின் மீது புகாராக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது புகார் மற்றும் போலிஸ் விசாரணையின்போது நான் தடுக்க சென்ற போது எனது வலது கையில் வெட்டுப்பட்டதாக கூறியுள்ளேன். பக்கத்தில் உள்ளவர்கள் என்னையும் எனது தாயாரையும் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்று கூறியுள்ளேன். போலிசார் என்னை இரண்டு முறை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள். அப்படி விசாரிக்கும்போது எனது தாயாரின் தலையில் வெட்டிய வெட்டால் மூளை நரம்பி பாதிக்கப்பட்டது என்று தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று கூறியுள்ளேன். புகார் வாக்குமூலத்தில் என்னுடைய கையொப்பம் மட்டும் பெறப்பட்டு அதில் கண்ட விவரங்கள் பின்னிட்டு எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

Sd/−செல்வம்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/− திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.